
பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 03 வள்ளுவ ஆண்டு 2057 ஆவணி 20 வெள்ளிக்கிழமை 05.09.2025 அதிர்வு 35

## ஐ.நாவின் புதிய பிரேரணை: அரசின் நிலைப்பாடு என்ன?



“ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மீளாவுக் கூட்டத் தொடர் ஆரம்பமாக முன்னர் அல்லது அதற்கிடைப்பட்ட காலப் 03

# கோர விபத்தில் 10 பேர் மரணம்

## 15 பேர் படுகாயம்



எல்ல – வெல்லவாய பிரதான வீதியின் 15 ஆவது மைல்கல்லுக்கு அருகில் பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 10 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். 04

## 4 எலும்புக்கூடுகள் நேற்று அடையாளம்



(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ் 04

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பதில்

# நீதிமன்றத்துடன் தொடர்புடையதே செம்மணி மனிதப் புதைகுழி விடயம்

### அதில் அரசு தலையிடாது; விசாரணைக்கு தேவையான வசதிகளை மட்டும் வழங்கும்



“செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் அரசு தலையிடாது. ஆனால், பொலிஸ் விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படும். நீதிமன்றத்துடன் தொடர் புடைய விவகாரத்தில் 03

# தென்னிந்திய அரசியல்வாதிகளுக்காக ஜனாதிபதி கச்சதீவுக்குச் செல்லவில்லை

### அது இலங்கைக்கே உரித்தான நிலப்பரப்பு என்று அமைச்சரவைப் பேச்சாளர் சாட்டையடி



“தென்னிந்திய அரசியல வாதிக ளுக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கச்சதீவு செல்லவில்லை. அது எமக்கு உரித்தான நிலப்பரப்பாகும். எனவே, கச்சதீவு தொடர்பில் நாம் மீண் டும் பேச வேண்டிய தேவை இல்லை. ஜனாதிபதி என்ற ரீதியில் ஜனாதிபதியால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அங்கு செல்ல முடியும்.”

– இவ்வாறு அமைச்சரவைப் பேச் சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். 03




பலாலி சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்பு மற்றும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி ஆகியவை தொடர்பில் அண்மைக்காலத்தில் என் பத்தியில் ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி வருகிறேன்.

இந்த இரண்டு திட்டங்களுக்கும் நேரடியாக உதவி வழங்குவதற்கு இந்தியா முன் வந்தும், அவை நடைமுறைப்படுத்தப் படவில்லை. வேண்டுமென்றே இழுத்தடிக்கப்படுகின்றன.

அதுவும் போக்குவரத்து, நெடுஞ் சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சராக பிமல் ரத்நாயக்கா பதவியேற்ற பின்னர் இந்தத் திட்டங்கள் வேண்டுமென்றே முடக்கப்பட்டு 03

# ‘முரசு’ நாளிதழ் பதிவு செய்யப்படாத பத்திரிகை காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் கண்டுபிடிப்பு

(என்.புவியரசன்)

“முரசு” பதிவு செய்யப்படாத பத்திரிகை. அதில் எவ்வாறு விளம்பரம் வழங்குகின்றீர்கள் என யாழ் மாநகர சபையின் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் து.நிஷாந்தன் என்பவர் நேற்று மாநகர சபையில் கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் சபை மண்டபத்தில் இடம்பெற்றபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேவையற்ற – பதிவு செய்யப்படாத – பத்திரிகையில் விளம்பரம் செய்து சபையின் நிதியை வீண் விரயம் செய்கின்றீர்கள். இது கணக்காய்வு அறிக்கையிலும் வரும். அப்போது பதில் அளிக்க வேண்டி வரும். – என்றார்.

**ஆசிரியர் குறிப்பு:-**

1.முரசு இணையப் பத்திரிகை இரண்டு ஆண்டுகளைத் தாண்டி, மூன்றாவது ஆண்டில் கால்அடி வைத்து பயணிக்கின்றது. முரசு இலங்கை ஊடக அமைச்சில் பதிவு செய்யப்பட்ட ஓர் இணையப் பத்திரிகையாகும். தினசரி காலை, மாலை இதழாக அது ஆரம்பித்த நாளிலிருந்து ஒரு நாள் கூட – ஒரு நேரம் கூட – தவறாமல் வெளிவந்து கொண்டிருக்கின்ற தினசரி இரு நேரப் பத்திரிகை. தாயகத்தில் மட்டுமல்லாமல் புலம்பெயர் தேசங்களிலும் ஒரே சமயத்தில் அதிகம் வாசிக்கப்படும் தமிழ் மின்னிதழ் முரசு.

2.அதன் ஆசிரியர் உட்படப் பணியாளர்களுக்கு ஊடக அமைச்சு தனது ஊடக அடையாள அட்டையை வழங்கியுள்ளது.

3. முரசு ஒன்றும் தகுதி இல்லாது, போலி முகவரி வழங்கி, இன்றைக்கோ நாளைக்கோ உறுப்புரிமை பறிபோகும் நிலையில் செயற்படும் தனிநபர் போன்ற கட்டமைப்புக் கிடையாது என்பதை சம்பந்தப்பட்ட உறுப்பினர் புரிந்து உரையாற்ற வேண்டும்.

4. ஊடக அமச்சின் பதிவை மாநகர முதல்வர் உறுதிப்படுத்தி, பதிவு செய்யப்பட்ட மின்னிதழே முரசு என்பதை அடுத்த சபை அமர்வில் உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பார் என எதிர்பார்க்கின்றோம்.

(ஆ-ர்)

# மாகாண சபைத் தேர்தல் நிச்சயம் நடைபெறுமாம்



## இப்படி பிரதி அமைச்சர் உறுதி

“மாகாண சபைத் தேர்தல்கள் நிச்சயம் நடத்தப்படும். பழைய முறைமையின் கீழ் அந்தத் தேர்தல் நடத்தப்படும்.”

– இவ்வாறு பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் சட்டம் இயற்றப்பட்டிருந்தாலும், எல்லை நிர்ணய அறிக்கை சபையில் நிறைவேற்றப்படவில்லை. எனவே, பழைய முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவது பற்றி பரிசீலிக்கப்படுகின்றது.

இணக்கம் எட்டப்பட்டால் அது தொடர்பான சட்ட திருத்தம் சபையில் முன்வைக்கப்படும்.

தேர்தலுக்கு நாம் அஞ்சவில்லை. அதனை நடத்தும் நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம்.” – என்றார்.


# இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி தேசிய ரீதியில் இரண்டாம் இடம் பெற்றார்

(கி.வசந்தன்)

வெளியான தரம் 5 புலமை பரிசில் பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் அரோனிக்கா ரேச்சல் என்ற மாணவி 189 புள்ளிகளை பெற்று மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தையும், வடமாகாண ரீதியில் இரண்டாம் இடத்தையும், அகில இலங்கையில் தமிழ் மொழி மூலமான பரீட்சையில் இரண்டாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களில் 76 பேர் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் வவுனியா தெற்கு வலய மாணவி ஒருவர் இரண்டாம் இடம் பெற்றமை இதுவே முதல்முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.



www.doenets.lk

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

GRADE 5 SCHOLARSHIP EXAMINATION - 2025

| | |
|---|---|
| Examination | GRADE 5 SCHOLARSHIP EXAMINATION |
| Year | 2025 |
| Name | ANTOINE KISHAN ARONIKA RAYCHEL |
| Index Number | 4131135 |
| District / Medium Cut off Mark | 132 |

| Subject | Result |
|---|---|
| Mark | 189 |



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றன என்ற சாரப்பட அவ்வப் போது குறிப்பிட்டு வந்திருக்கிறேன்.

நான்கு, ஐந்து மாதங்களுக்கு முன்னர் இது தொடர்பான என் குறிப்பு இப்பத்தியில் வெளியான ஒரு தினத்தில், யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் இது பற்றி செய்தியாளர்கள் நேரில் கேட்டார்கள்.

"பலாலி விமான நிலைய அபிவிருத்தியை நான்கு மாதங்களுக்குள் செய்து முடிப்போம். காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தியும் விரைவில் நடக்கும்." - என்றெல்லாம் அச்சமயத்தில் வாயால் வெட்டி விழ்த்தினார் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா.

அவர் அப்படி கூறி ஐந்து மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் களத்தில் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. இன்னொரு தடவை பலாலி விமான நிலைய அபிவிருத்தி குறித்து அவர் ஆரவாரம் பண்ணியிருக்கிறார். அவ்வளவுதான். அதற்கு மேல் எதுவும் நடக்கவில்லை.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கு இந்தியா நேரடியாக பெருமளவு உதவி வழங்க முன் வந்தும் அதனைக் கைவிட்டு விட்டது அமைச்சர் பிமல் ரத்நாயக்காவின் அரசு. அதை அவரே ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

கொழும்பு வார இதழ் ஒன்றில் இவ்விடயம் தொடர்பில் அவரிடம் கேட்கப்பட்ட கேள்வியும் பதிலும் வெளியாகியுள்ளன. அதனைக் கீழே தருகிறேன். என் கருத்துகள் - முற்கூட்டிய தகவல்கள் - எவ்வளவு தூரம் சரியானவை என்பதை இந்தக் கேள்வி - பதில் தெளிவுபடுத்தும்.

**கேள்வி:-** காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கு இந்தியா 60 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு (1,800 கோடி ரூபாவுக்கு) மேல் நிதி ஆதரவை வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் இன்னும் ஏன் ஆரம்பிக்கப்படவில்லை?

**அமைச்சரின் பதில்:** ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியிலேயே காங்கேசன்துறை துறைமுக ஒப்பந்தம் இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டது. ஆரம்பத்தில் கடன் திட்டமாக இருந்த போதிலும் பின்னர் அதனை உதவித் திட்டமாக முன்னெடுக்க விரும்புவதாக இந்தியா அறிவித்திருந்தது. ஆனால் வர்த்தக ரீதியில் இந்த துறைமுகம் வெற்றியளிக்குமா என்பதில் பல்வேறு சந்தேகங்கள் உள்ளன. ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் இது குறித்து சந்தேகங்கள் வெளிபட்டுள்ளன.

அடுத்து வரக்கூடிய 10 அல்லது 15 ஆண்டுகளில் காங்கேசன்துறை துறைமுகம் வர்த்தக ரீதியில் வெற்றி அளிக்கலாம். ஆனால் தற்போதைய நிலையில் அதி சாத்தியமில்லை. அந்தத் துறைமுகத்தில் 32 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களுக்கு 13 - 15 மில்லியன் ரூபா வரை மாதாந்தம் செலவிடுகிறோம். வருமானம் மிகவும் குறைவாக உள்ளது. இருப்பினும் துறைமுகத்தைக் கொண்டு நடத்த வேண்டும் என்பதற்காக செலவிடுகின்றோம். அதேபோன்றுதான் காலி துறைமுகமும் நட்டத்திலேயே இயங்குகிறது. கொழும்புத் துறைமுகத்தில் கிடைக்கும் நிதியையே காலிக்குச் செலவிடுகிறோம். மறுபுறம் ஒலுவில் துறைமுகம் தோல்வியடைந்த திட்டமாகும். திருகோணமலையிலும் இதே நிலைதான்.

எனவே பொருளாதார ரீதியில் நாம் எதிர்கொள்கின்ற சவால்களுக்கு மத்தியில் காங்கேசன்துறை துறைமுகம் வர்த்தக ரீதியில் வெற்றி அளிக்காது என்று அறிக்கையும் உள்ளதால் இதே மட்டத்தில் வைத்திருக்கவே தற்போதைக்குத் தீர்மானித்துள்ளோம்.

ஏனெனில் உதவியாக நிதி கிடைத்தாலும் அதனைக் கொண்டு நடத்த நிதி தேவைப்படும். உதாரணமாக மத்தள விமான நிலையத்தை யாராவது இலவசமாக வழங்கினார்கள் என்றாலும் அதனைக் கொண்டு நடத்த செலவிட வேண்டும். இந்தச் சிக்கல்களைக் கருத்தில் கொணந்தான் காங்கேசன்துறை துறைமந்த் திட்டத்தை கிடப்பில் வைத்துள்ளோம்.

- இப்படிப் பதிலளித்திருக்கிறார் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா .

ஆக, இந்தப் பதில் காங்கேசன்துறை துறைமுகம் இந்த ஆட்சியாளர்களின் காலத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டு இயக்கப்பட மாட்டாது என்பதை தெளிவுபடுத்துகின்து. இதைத்தான் அண்மைக் காலமாக நான் பல தடவைகள் சுட்டிக் காட்டி வந்தேன். இப்போது விடயம் குதிரையின் வாயிலிருந்து வந்திருக்கின்றது. அவ்வளவுதான்....!

## நீதிமன்றத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் தலையீடு தேவையற்றதாகும்."

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையில் செம்மணிக்கு சுயாதீன விசாரணைப் பொறிமுறையை நிறுவுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அத்தோடு சர்வதேச நிபுணத்துவத்தின் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பில் உள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு கூறிய அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, மேலும் குறிப்பிடுகையில்,

"செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. எனவே, அதனுடன் தொடர்புடைய விடயங்கள் நீதிமன்றத்துக்கே அறிவிக்கப்படும். நீதிமன்றம் சுயாதீனமான நிறுவனமாகும் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான வசதிகள் அரசால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக விசேட குழுவொன்றினால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மறுபுறம் பொலிஸ் விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு அதற்கான தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு நாம் இடமளித்திருக்கின்றோம். அதற்கமைய அந்த விவகாரத்தில் நியாயமான செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக நம்புகின்றோம்." – என்றார்.

## ஐ.நாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில், இலங்கைக்கு எதிராக முன் வைக்கப்படவுள்ள பிரேரணை குறித்த நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சு அறிவிக்கும்."

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

"கடந்த ஆண்டுகளில் எமது நாட்டில் காணப்பட்ட ஜனநாயக மீறல்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற நிலைமை தற்போது கணிசமானளவு மாற்றமடைந்துள்ளது என்று சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரும் அந்த அடிப்படையிலேயே அறிக்கையை வெளியிட்டுள்ளார்.அதேபோன்று அவர்கள் தரப்பில் சில கண்காணிப்புக்களும் காணப்படுகின்றன. அரசும், வெளிவிவகார அமைச்சும் இது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடர் ஆரம்பமாக முன்னர் அல்லது அதற்கிடையில் இது தொடர்பில் அரசு அதன் நிலைப்பாட்டை அறிவிக் கும்." – என்றார்.

## தென்னிந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் உள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் குறிப்பிடுகையில்,

"அபிவிருத்தித் திட்டங்கள் சிலவற்றை ஆரம்பித்து வைப்பதற்காகவே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார். யாழ்ப்பாணத்தில் மாத்திரமின்றி கிழக்கு மற்றும் ஏனைய மாகாணங்களிலும் அபிவிருத்தித் திட்டங்களைத் திறந்து வைக்கும் நிகழ்வுகளில் எதிர்வரும் மாதங்களில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார். ஜனாதிபதியின் கச்சதீவு விஜயம் அதிவிசேடமானதல்ல.

தென்னிந்தியாவில் அவ்வப்போது அரசியல் தலைவர்கள் கச்சதீவு குறித்து பேசுவது வழமையானதொரு விடயமாகும். அவர்கள் தமக்காக வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு கச்சதீவு தொடர்பிலோ அல்லது வடக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலோ வாக்குறுதிகளை வழங்குவர்.

எனவே, கச்சதீவு தொடர்பில் நாம் மீண்டும் பேச வேண்டிய தேவை இல்லை. கச்சதீவு எமக்கு உரித்தான நிலப்பரப்பாகும். அதில் சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து அந்தப் பகுதியை அபிவிருத்தி செய்வது குறித்தும் கூடுதல் அவதானம் செலுத்தியிருக்கின்றோம்.

அந்தவகையில் தென்னிந்தியாவில் கூறப்பட்ட கருத்துக்கும் ஜனாதிபதியின் கச்சதீவு விஜயத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஜனாதிபதி என்ற ரீதியில் நாட்டிலுள்ள சகல பிரதேசங்களுக்கும் ஜனாதிபதியால் செல்ல முடியும்.

அவ்வாறு செல்லும் போது மக்களுடன் கலந்துரையாடி, அந்தப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பில் நேரடியாக அவதானம் செலுத்தினால் அது சிறந்ததாகும். நாம் அறிந்த வகையில் இதுவரையில் ஜனாதிபதி ஒருவர் கச்சதீவுக்குச் செல்லவில்லை. அந்தவகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்த விஜயம் மிக முக்கியத்துவம் மிக்கது." – என்றார்.

# நாம் கேட்பதெல்லாம் இனவாதம் அல்ல! எமது உரிமைகளையே கேட்கின்றோம்!!

## தமிழரசின் தலைவர் சி.வி.கே. தெரிவிப்பு



"நாம் கேட்பதெல்லாம் இனவாதம் எனச் சொல்ல முடியாது. அது இனவாதம் அல்ல. மதிப்போடு அன்போடு உங்களைத் தெரிந்த வகையில் எங்களை இனவாதிகள் என்று முத்திரை குத்தாமல் எங்கள் உணர்வுகளை மதித்து அபிலாஷைகளைக் கருத்தில் எடுத்து தீர்மானத்துக்கு வர வேண்டும் எனப் பொறுப்போடு ஜனாதிபதியையும் அரசையும் கேட்டுக் கொள்கின்றோம்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"அரசின் பார்வையில் நாங்கள் இனவாதிகள். ஜனாதிபதிக்குரிய மரியாதையாகச் சொல்ல விரும்புகின்றேன். நான் மட்டுமல்ல, இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டுமல்ல, ஏனைய தமிழ்க் கட்சிகள் எதுவுமே இனவாதக் கட்சிகள் அல்ல. எங்களை இனவாதம் பேச வைத்தது யார்? தென்னிலங்கை இனவாதிகளே.

1940 மட்டும் நாங்கள் தமிழ்த் தேசம் கேட்டமா? 1920 பண்டாரநாயக்க சமஷ்டி கேட்டபோது நாங்கள் அதை வேண்டாம் என்று ஒதுங்கி இருந்தோம்.

சிங்களம் மட்டும் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறியது சாணக்கியனின் பேரனார் இராசமாணிக்கம். அப்போது முரண்பாடு ஆரம்பித்தது நீங்களே. நீங்கள்தானே இனவாதம் பேசினீர்கள். நாங்கள் இனத்துவமே பேசினோம். இனவாதம் பேசவில்லை.

மலையக மக்களின் பிரஜாவுரிமைகளைப் பறித்தமை, சிங்கள மட்டும் சட்டம் என ஒவ்வொரு சட்டத்தையும் கொண்டு எம்மைத் தள்ளுகின்ற போதும் நாங்கள் இனவாதம் பேசவில்லை.

சிங்கள மக்களின் இனவாதத்தின் அடிப்படையில் அதை எதிர்கொள்வதற்கும் பாதுகாப்பதற்குமான உரிமைகளைக்கேட்கின்றோமே தவிர இங்கு நாங்கள் நிச்சயமாக இனவாதம் பேசவில்லை.

தமிழ்க் கட்சிகள் இனவாதம் பேசுவதில்லை. நாங்கள் இலங்கையர்கள்தான். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அதனால் நாம் இலங்கைத் தமிழர்கள், எமக்கென்று கலாசாரம் , மொழி, இனம், நிலம் இருக்கின்றன.

பிரிந்து போக நாம் விரும்பவில்லை. நாங்கள் பிரிவினையையும் கேட்கவில்லை. இனவாதம் என்ற வரையறைக்குள் தமிழ் மக்களைச் சேர்க்காமல், தனியே இலங்கைத் தேசியம் என்ற கருத்தியலுக்குள் நாங்கள் கரைந்து வழிந்து போக விரும்பவில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தயவு செய்து ஜனாதிபதியிடமும் அரசிடமும் நாம் கேட்டுக்கொள்வது நாம் சந்திப்பை கோரவிருக்கின்றோம். எங்கள் அடிப்படை உரிமைகளை ஆற அமர இருந்து ஆராய்ந்து பார்த்து எங்களோடு தனியாக மட்டுமல்ல தமிழ் பேசும் பிரதிநிதிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கான முயற்சியைச் செய்ய வேண்டும்.

எங்களை இனவாதிகள் என்று முத்திரை குத்தாமல் எங்கள் உணர்வுகளை மதித்து அபிலாஷைகளைக் கருத்தில் எடுத்து தீர்மானத்துக்கு வர வேண்டும் எனப் பொறுப்போடு அரசையும் ஜனாதிபதியையும் கேட்டுக்கொள்கின்றோமம்."

– என்றார்.






## 4 எலும்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வின் போது 4 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 43ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது 4 மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 235 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 11 மனித என்புத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி புதைகுழியில் இருந்து இதுவரை 224 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 3 நாட்களாகக் குவியல்களாக மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட இடத்தில் நேற்றும் என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலும் மூன்று சட்டைப் பொத்தான்கள், சில்லறைக்காசு, தாயத்து ஒன்றும் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டு சான்றுப் பொருட்களாக நீதிமன்றக் கட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளன.

## கோர விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 15 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுமார் 300 – 400 அடி பள்ளத்தில் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த பஸ்ஸில் தங்காலை நகர சபையின் ஊழியர்கள் பயணித்தனர் என்று கூறப்படுகின்றது. விபத்தின்போது பஸ்ஸில் சுமார் 30 இற்கும் மேற்பட்டோர் இருந்துள்ளனர். மீட்புப் பணிகள் இரவிரவாகத் தொடர்ந்தன.





# இலங்கை - இத்தாலி இடையே முதலாவது அரசியல் கூட்டம்!

இலங்கை – இத்தாலி இடையிலான முதலாவது அரசியல் ஆலோசனைக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இந்தக் கூட்டம் இத்தாலியின் வெளிவிவகார மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான பிரதி அமைச்சர் மரியா திரிபோடி மற்றும் இலங்கை வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர தலைமையில் நடைபெற்றது.

இதில் இலங்கை மற்றும் இத்தாலி இடையே அரசியல் ஆலோசனைப் பொறிமுறையை நிறுவுவது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, கல்வி, கலாசாரப் பரிமாற்றம், எரிசக்தி மாற்றம், பல்தரப்பு உறவுகள், விமானப் போக்குவரத்து, கடல்சார் ஒத்துழைப்புகள் மற்றும் விவசாயம் ஆகியவை குறித்து கலந்துரையாடப்பட்டன.

இலங்கைக்கும் இத்தாலிக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தும் புதிய அத்தியாயமாக இந்த ஒப்பந்தம் காணப்படுகின்றது.












நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அது வேறு; இது வேறு!

‘வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு என்றானாம்’ என ஒரு சொலவடை நம் மத்தியில் உண்டு. செம்மணி மனிதப் பெரும் புதைகுழி தொடர்பான விடயம் குறித்து அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறிய கருத்தை நோக்கும் போது இந்த சொலவடைதான் நினைவுக்கு வருகிறது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உண்மைகளைக் கண்டறியும் நேரடிக் கள விஜயத்தின் பின்னர் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையில் செம்மணிக்கு சுயாதீன விசாரணைப் பொறிமுறையை நிறுவுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அத்தோடு சர்வதேச நிபுணத்துவத்தின் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பில் உள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, ‘‘செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. எனவே, அதனுடன் தொடர்புடைய விடயங்கள் நீதிமன்றத்துக்கே அறிவிக்கப்படும். நீதிமன்றம் சுயாதீனமான நிறுவனமாகும் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான வசதிகள் அரசால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் அரசு தலையிடாது’’ - என்று கூறியிருக்கின்றார்.

செம்மணி தொடர்பில் இப்போது நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கின்ற விடயங்களையும் புரிந்து கொள்ளாமல், இலங்கை மனித உரிமை ஆணைக்குழு இது தொடர்பில் வெளியிட்ட அறிக்கையின் அடிப்படைகளையும் விளங்கிக் கொள்ளாமல், அமைச்சரவைப் பேச்சாளர் பேசியிருக்கின்றார் என்றுதான் தோன்றுகின்றது.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் இப்போது நீதிமன்றம் செய்வது ஒரு வகையில் மரண விசாரணைக் கொப்பானதுதான். ஒரு சடலம் கண்டுபிடிக்கப்பட்டால் அது தொடர்பில் நீதிவான் நீதிமன்றம் எடுக்கக்கூடிய நடவடிக்கை, இப்போது பல மனித எச்சங்கள் ஒன்றாக எடுக்கப்படும் இடத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வளவுதான். அதற்கு மேல் என்ன செய்ய வேண்டும், அப்படி செய்வதற்கு இப்போதே என்ன ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகி இருக்கின்றது.

இப்போது நீதிமன்றம் மேற்கொள்ளும் சடலங்கள் அல்லது மனித எச்சங்களைக் கண்டுபிடித்தல், அவற்றை சட்ட ரீதியான அடுத்த கட்ட நடவடிக்கைக்கு உரிய வகையில் பாதுகாத்தல், அவற்றை அடையாளம் காண முற்படுதல், அந்த மரணங்களுக்கான காரணங்கள் தொடர்பில் முதற்கட்ட அறிக்கைகளைத் தயார் செய்தல் போன்ற நடவடிக்கை வேறு. அதன் பின்னர் இந்த மரணங்களுக்கு காரணமான விவகாரங்களை புலன் விசாரணை செய்தல், அது தொடர்பில் நவீன தொழில்நுட்ப அறிவை பயன்படுத்துதல், உண்மைகளை கண்டறிதல், தவறு இழைத்தோரை அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்தல், பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட வேண்டும். அது இப்போது மனிதப் புதைகுழியை அகழும் வேலையைக் கண்காணித்து முன்னெடுக்கும் இந்த நீதிமன்றத்தின் பணி அல்ல. இதற்கு புறம்பானது அது.

அதனைத்தான் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் தமிழர் தரப்பு ஆகியவை சுட்டிக்காட்டுகின்றன. சுயாதீன விசாரணைப் பொறிமுறை, நவீன தொழில்நுட்ப மற்றும் நிபுணத்துவ முறைகளை பயன்படுத்தி புதைக்குழியில் மீட்கப்பட்ட மனித எச்சங்களை அடையாளம் காணுதல், குற்றம் இழைத்தோரைக் கண்டுபிடித்தல், சட்டத்தின் முன் நிறுத்துதல் போன்றவை தொடர்பான விடயங்கள் அவற்றில் அடங்கும். அது தொடர்பில்தான் அரசுக்கு இப்போது புதிய வலியுறுத்தல்கள் முன்வைக்கப்படுகின்றன. இப்போதைய நீதிமன்ற நடவடிக்கைகளைக் காட்டி அந்தப் பொறுப்பில் இருந்து அரசு தப்பி விட முடியாது.

விளங்காதவர் போல பேசி இந்த விவகாரத்தை இப்போதைக்கு சமாளிக்கப் பார்க்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர் என்றே தோன்றுகின்றது.

# கணவனை விட்டுப் பிரிந்து வாழ்ந்த குடும்பப் பெண் கொடூரக் கொலை!

இராஜாங்கனையில் மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர், ஒரு குடும்பப் பெண்ணைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிப் படுகொலை செய்துள்ளனர்.

இறந்தவர் இராஜாங்கனை பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய இரண்டு குழந்தைகளின் தாய் ஆவார்.

மேற்படி பெண் மூன்று மாதங்களுக்கு முன்பு தனது கணவரிடம் இருந்து பிரிந்து அவரது வீட்டில் வசித்து வந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



அவர் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு தனது வீட்டின் முன் தொலைபேசி அழைப்பை எடுத்துக் கொண்டிருந்தபோது, இரண்டு பேர் அவரைக் கூர்மையான ஆயுதத்தால் தாக்கியுள்ளனர்.

அந்தப் பெண்ணை உறவினர்கள், மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது அவர் இறந்துவிட்டார் எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இராஜாங்கனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# நீதி கோரிய கையொழுத்துப் போராட்டம் மட்டக்களப்பில் நேற்று ஆரம்பித்துவைப்பு

(கனகராசா சரவணன்)

செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு கிழக்கு மண்ணில் உள்ள மனித புதைகுழிகளுக்கானதும் நடைபெற்ற இனப் படுகொலைகளுக்குமான சர்வதேச நீதி கோரிய கையெழுத்துப் போராட்டத்தை நேற்று வியாழக்கிழமை கிழக்கில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து ஆரம்பித்து வைத்தன.

இந்தக் கையெழுத்து போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து சிறிநேசன், வைத்தியர் இளையதம்பி சிறிநாத், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், பாக்கியசோதி அரியநேத்திரன் , முருகேசு சந்திரகுமார், சுரேஷ் பிறேமச்சந்திரன், மட்டு மாநகர சபை முன்னாள் முதல்வர் சரவணபவான் உட்பட தமிழ் தேசிய கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டு ஆர்வமாகக் கையெழுத்து இட்டனர்.











# மண்டைதீவு மனிதப் புதைகுழிக் கிணற்றை அகழ வலியுறுத்தி பொலிஸில் முறைப்பாடு

மண்டைதீவுப் படுகொலையில் உயிரிழந்தவர்களின் உடலங்கள் புதைக் கப்பட்டன எனக் கூறப்படும் கிணதுகளை அகழ்ந்து, அந்த சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட்டு உண்மைகள் வெளிக் கொணரப்படு வதுடன் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு நீதியும் பரிகாரமும் வழங்கப்பட வேண்டும் என்று கோரி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று நேற்றுப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் தனது மகனைப் பறிகொடுத்த 81 வயதுடைய ஸ்ரிபன் மரில்டா என்பவர் வேலணை பிரதேச சபையின் உறுப்பினரான சுவாமிநாதன் பிரகலாதன் ஆகியோரால் வேலணை பிரதேச சபையின் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் உறுப்பினரான திருமதி அனு சியா ஜெயகாந்த், அகில இலங்கை தமிழ் கங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களான கருணாகரன் நாவலன் மற்றும் திருநாவுக்கரசு சிவகுமாரன், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான செந்த மிழ்ச்செல்வன் திருக்கேதீஸ்வரன், தமிழ ரசுக் கட்சியின் உறுப்பினரான மங்களேஸ் வரன் கார்த்தீபன் ஆகியோரது பிரசன் னத்துடன் இருவேறு முறைப்பாடுகள்







நேற்று ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டன.

35 வருடங்களுக்கு முன்னர் ஒகஸ்ட் மாதம் 25 மற்றும் 26 ஆகிய நாள்களில் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும் பான் ஆகிய பகுதிகளில் பாரிய மனிதப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன எனவும், இதன்போது 80 இற்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் காணாம லாக்கப்பட்டமையுடன் மேலும் பலர் கொல்லப்பட்டனர் எனவும் கூறப்படு கின்றது.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் 45 இற்கும் அதிகமான உடலங்கள் மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் போடப் பட்டன எனவும் அதற்கான வாழும் சாட்சி யங்கள் உறுதியாகவும் இருக்கின்றன எனவும் கூறப்படுகின்றது. அதேபோன்று அதற்கு அயலில் உள்ள பாடசாலை கிணறு ஒன்றுக்குள்ளும் உடலங்கள் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்படு கின்றது.

முன்பதாக கடந்த மாதம் 20 ஆம் திகதி வேலணை பிரதேச சபையில் இந்தப் புதைகுழியை அகழ்ந்து உண் மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்று வலியுறுத்தி முன்வைக்கப்பட்ட பிரேரணை சபையில் அனைத்து உறுப்பினர்களின் ஏக ஆதரவுடன் நிறை வேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# பாதாள உலகக் கோஷ்டி கைது: நாமல் ஏன் கலவரமடைகின்றார்?

## அமைச்சரவைப் பேச்சாளர் கேள்வி



"பாதாள உலகக் குழுவின் தலைவர்கள் ஐவர் இந்தோனேஷியாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டமை சாதாரண விடயம் அல்ல. இந்த விடயம் தொடர்பில் நாமல் ராஜபக்ஷ எம்.பி. ஏன் கலவரமடைகின்றார் என்பது எமக்குத் தெரியும்."

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

"பாதாள உலகக் குழுவின் தலைவர்கள் ஐவர் இந்தோனேஷியாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டமையைச் சாதாரணமாகக் கருத வேண்டாம். எமது குற்றப் புலனாய்வுப் பிரிவினர், இரு நாட்டு பொலிஸார், சர்வதேச பொலிஸ், இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட பல தரப்பினரின் அர்ப்பணிப்பான சேவைக் கமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஐவரையும் நாட்டுக்கு அழைத்து வருவது என்பது சாதாரண விடயம் அல்ல. இதனை விடப் பாரிய குற்றங்கள் தொடர்பில் அறிந்திருப்பதால் நாமல் ராஜபக்ஷவுக்கு இது சாதாரண விடயமாக இருக்கலாம். எனவே, இது அவர்களுக்குச் சிறிய விடயமாக இருந்தாலும் நாட்டுக்குப் பெரிய விடயமாகும். அடுத்த கட்ட விசாரணைகளில் வெளியாகவிருக்கும் தகவல்களில் இதனுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் உட்பட பலரது தகவல்களும் வெளியாகும்.

படிப்படியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அதற்கமைய சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். விசாரணைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரும், பொலிஸாரும் மேலதிக தகவல்களை ஊடகங்களுக்கு வழங்குவர்.

மக்களின் பாதுகாப்புக்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளைச் சிறிதாக எண்ண வேண்டாம் என்றும், சற்று முற்போக்காகச் சிந்திக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம். அண்மையில் ஊடக அடையாள அட்டையைப் பயன்படுத்தி கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, சிலரது தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். இந்த விடயத்தில் நாமல் எதற்காக இந்தளவுக்குக் கலவரமடைந்தார் என்பது எமக்குத் தெரியும்.

குற்றங்களுடன் தொடர்பற்ற எவரும் வீணாகக் கலவரமடையத் தேவையில்லை. மாறாக வேறு தகவல்கள் தெரிந்திருந்தால் அவற்றைப் பொலிஸாருக்கு வழங்குவது சிறந்ததாகும். இங்கு எந்தவொரு பிரசாரமும் முன்னெடுக்கப்படவில்லை. பொலிஸாரைக் கௌரவிப்பதற்காவே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விமான நிலையத்துக்குச் சென்றிருந்தார்." – என்றார்.



# யாழ் நகரில் நிறுவப்பட்ட மேம்பால பதாகையால் மாநகர சபையின் அமர்வில் நேற்று அமளி துமளி

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதியில் விக்ரோறியா வீதி அமைந்திருக்கும் பகுதியில் சட்டவிரோதமாக பிரதான வீதிக்கு குறுக்காக அமைக்கப்பட்ட மேம்பால பதாகை தொடர்பில் நேற்று நடைபெற்ற யாழ் மாநகர சபை அமர்வில் கடும் அமளி துமளி ஏற்பட்டது.

யாழ் மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்றுக் காலை மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா தலைமையில் கூடியது.

இதன்போது யாழ் நகரில் எந்த விதமுறையான அனுமதியும் இல்லாது சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மேம்பால பதாகை தொடர்பில் மாநகர சபை உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

மாநகர முதல்வர் மற்றும் மாநகர ஆணையாளருக்கே தெரியாமல் மாநகர சபை உத்தியோகத்தர்கள் குறித்த சட்டவிரோத செயலுக்கு உடந்தையாக இருந்தனர் என மாநகர சபை உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினார்.

இதன்போது மாநகர சபை பிரதி ஆணையாளர் சபை அமர்வு நடைபெற்ற போது அழைக்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டது.

ஒவ்வொரு மாநகர சபை உறுப்பினராக எழுந்து கருத்து தெரிவிக்குமாறு கோரிய போது பல உறுப்பினர்களும் எழுத்து உரத்து கருத்து தெரிவிக்க முற்பட்டதால் மாநகர சபை அமர்வில் அமைதியின்மை ஏற்பட்டது.

ஒருகட்டத்தில் கோபமடைந்த மாநகர முதல்வர், இவ்வாறு கூட்டத்தை நடத்த விடாமல் தொடர்ந்து செயற்பட்டால் பொலிஸ் பாதுகாப்புடன் கூட்டத்தை நடத்துவேன் – என்றார்.

இதனால் கோபமடைந்த மாநகர சபை உறுப்பினர், நீங்களும் இராணுவத்தையும் அழையுங்கள். நீங்கள் ஊழலுக்கு துணை போகிறீர்கள் எனக் குற்றஞ்சாட்டினார்.

இதன்போது சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மேம்பால பதாகை அகற்றப்பட்டுள்ளதாகவும் அந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என முதல்வர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த விடயம் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறையிடவும் சபையில் தீர்மானிக்கப்பட்டது.

இதனையடுத்து நிலைமை சுமூகமானது.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் நிச்சயம் நீக்கப்பட்டே தீரும்!

## புதிய சட்டமும் கட்டாயம் அமுலாகும் என்கின்றது அரசு

பயங்கரவாதத் தடைச் சட்டம் நிச்சயம் நீக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக் கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் மாநாட்டில் இதனைத் தெரி வித்த அவர், மேலும் கூறுகையில்,



"பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டம் நிச்சயம் நீக்கப்பட்டு, புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

எவ்வாறிருப்பினும் அதுவரை சில சட்ட நடவடிக்கைகளுக்காகப் பயங்கர வாதத் தடை சட்டத்தைப் பயன்படுத்த வேண்டியேற்பட்டுள்ளது.

புதிய சட்டத்தை அறிமுகப்படுத் துவதற்கான கால அவகாசம் குறித்து இப்போது கூற முடியாது. விரைவில் அதனையும் அறிவிப்போம்." – என் றார்.

# கிருஷாந்தி நினைவு நாளை இம்முறை எழுச்சியாக முன்னெடுக்கத் தீர்மானம்




யாழ்ப்பாணம் – செம்மணி பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மாணவி கிருஷாந்தி குமாரசாமியின் 29 ஆவது ஆண்டு நினைவு தினம் இம்முறை எழுச்சியாக நடத்தத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

யாழ்.ஊடக அமையத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடத்திய ஊடக சந்திப்பில் இவ்விடயம் தெரி விக்கப்பட்டது.

1996ஆம் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூ ரி மாணவி கிருஷாந்தி வீதியால் சென்று கொண்டிருந்தபோது செம்மணிப் பகுதியில் அப்போதிருந்த இராணுவத் தடை முகாமில் வழிமறித்த இராணுவத்தி னர் அவரை சித்திரவதையின் பின் படு கொலை செய்தனர் என்பது விசார ணையில் அம்பலமாகியது.

இந்நிலையில் இன்று ஐந்தாம் திகதி மாலை 3 மணியிலிருந்து ஆறு மணி வரை செம்மணி அணையா விளக்கு வைக்கப்பட்டுள்ள யாழ் வரவேற்பு பகுதியில் ஊர்தியை கொண்டு வந்த நிறுத்தி, அனைத்துத் தரப்பினரையும் அழைத்து, அதனூடாக பொதுவான நினைவேந்தல் கட்டமைப்பை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாளை ஆறாம் திகதி நாவற்குழி, கைதடி, தனங்கிளப்பு, குருநகர், யாழ்ப் பாணம் போன்ற பகுதிகளுக்கு ஊர் தியை கொண்டு சென்று துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட உள்ளது.

கிரிசாந்தி கொல்லப்பட்ட தினமான ஏழாம் திகதி காலை 9 மணியிலிருந்து 11 மணி வரை இரண்டு மணித்தியாலம் நினைவேந்தல் நடத்தப்படவுள்ளது.

செம்மணி மனித புதைகுழி அகழ்வு பணிகள் நடைபெற்று வரும் நிலையில் கிருஷாந்தி குமாரசாமியின் நினை வேந்தலை சமூக மட்டத்தில் பெரியளவு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. அந்த வகையில் இந்த நினைவேந்தல் குழு செய்கின்ற நினைவேந்தல்களில் அனைத்து சமூக மட்ட அமைப்புகளும் பொதுமக்கள் அனைவரையும் அணி திரண்டு வரவேண்டும் என ஏற்பாட் டாளர்கள் அழைப்பு விடுத்தனர்.

# ஒரு வருடத்துக்கு முன்னர் 9 வயதுச் சிறுமி மீது பாலியல் சேட்டை புரிந்த கான்ஸ்டபிள் கைது!

**(கனகராசா சரவணன்)**

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் 9 வயது சிறுமி மீது பாலியல் சேட்டை மேற் கொண்ட – மட்டக்களப்பு பொலிஸ் நிலை யத்தில் கடமையாற்றி வரும் – பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை மொனராகலை புத்தல பொலிஸார் நேற்று முன்தி னம் புதன்கிழமை கைது செய்துள்ள னர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது:–

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிலரும் மொனராகலை புத்தல பொலிஸ் பிரிவு பிரதேசத்தைச் சேர்ந்த இந்தப் பொலிஸ் கான்ஸ்டபிள் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் லீவில் வீட்டுக்கு சென்றுள்ள நிலையில் சம்ப வதினமன்று அவர் மோட்டர் சைக்கிளில் பிரயாணித்தபோது, அந்தப் பகுதியைச் சேர்ந்த 9 வயது சிறுமியின் தாயார் தமது மகள் பாடசாலைக்குச் சென்றுள்ளார் எனவும் வரும் போது அவரையம் ஏற்றிக் கொண்டுவந்து விடுமாறு கோரியுள் ளார்.

இதனையடுத்து அந்தச் சிறுமியை பாடசாலையில் இருந்து ஏற்றிச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் சிறுமி மீது மறைவான காட்டு பகுதியில் வைத்து பாலியல் சேட்டை செய்துள்ளார். இது தொடர்பாக பாதிக்கப்பட்ட சிறுமி கடந்த ஒருவருடமாக பெற்றோரிடம் எதுவும் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த வாரம் பாடசாலையில் மாணவர்களுக்கு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. அதன் போதுதான் அந்தச் சிறுமி தன் மீது பொலிஸ் கான்ஸ்டபிள் பாலியல் சேட்டை மேற்கொண்டுள்ளார் என்பதைப் புரிந்து கொண்டார் என அறிய வந்தது.

இதனையடுத்து சிறுமி தனக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் இவ்வாறு குறித்த நபரால் பாலியல் சேட்டை இடம் பெற்றுள்ளதாக கடிதம் ஒன்றை எழுதி ஆசிரியரிடம் கொடுத்துள்ளார். இதை யடுத்து அவர் இது தொடர்பாக அதிபர் மற்றும் பெற்றோர் கவனத்துக்கு கொண்டு வந்ததமையுடன் பொலிஸா ருக்கும் தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இந்தக் கான்ஸ்டபிள் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்து லீவில் வீட்டுக்குத் திரும்பிச் சென்றுள்ள நிலையில் அவரை அங்கு வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்ட பிளை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புத்தல பொலிஸார் தெரிவித்தனர்.

# சிறு வணிகங்களை எளிதாக்கும் ஜி.எஸ்.டி. சீர்திருத்தங்கள் அமல்

## பிரதமர் மோடி பெருமிதம்



மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்ற ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் முக்கியமான சீர்திருத்தங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தற்போதைய 12 வீதம் மற்றும் 28 வீத ஜி.எஸ்.டி. வரி அடுக்குகள் நீக்கப்பட்டு, 5 வீதம் மற்றும் 18 வீதம் ஆகிய இரண்டு அடுக்குகளை மட்டுமே கொண்ட புதிய ஜி.எஸ்.டி. வரி அமைப்பு செப்டம்பர் 22 முதல் அமுலுக்கு வரவுள்ளது.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி எக்ஸ் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“சுதந்திர தின உரையில் குறிப்பிட்டபடி, அடுத்த தலைமுறை ஜி.எஸ்.டி. சீர்திருத்தங்களை கொண்டு வர எங்கள் அரசு விரிவான திட்டம் ஒன்றை தயாரித்திருந்தது.

சாதாரண மக்களின் வாழ்க்கையை எளிதாக்கி பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே அதன் நோக்கம்.

மத்திய அரசு மற்றும் மாநிலங்களின் பங்களிப்புடன் கூடிய ஜி.எஸ்.டி. கவுன்சில், மத்திய அரசு முன்மொழிந்த விகிதக் குறைப்புகள் மற்றும் சீர்திருத்தங்களை கூட்டாக ஒப்புக்கொண்டுள்ளது.

இது சாமானியர், விவசாயிகள், சிறு குறு தொழிலாளர்கள், நடுத்தர வர்க்கம், பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பயனளிக்கும். குறிப்பாக சிறு வணிகங்கள் மற்றும் தொழில்களுக்கு வணிகம் செய்வதை எளிதாக்கும்.” என குறிப்பிட்டுள்ளார்.

# தங்கம் கடத்திய வழக்கில் ரன்யா ராவுக்கு அபராதம்



கர்நாடக பொலிஸ் டி.ஜி.பி. ராமசந்திர ராவின் வளர்ப்பு மகளும், நடிகையுமான ரன்யா ராவ் (வயது 32), டுபாயில் இருந்து 14.8 கிலோ தங்கம் கடத்தி வந்த குற்றச்சாட்டில் கடந்த மார்ச்சில் பெங்களூர் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

அவரது வீட்டில் நடத்திய சோதனையில் 2.8 கோடி இந்திய ரூபா மதிப்பிலான தங்கமும், 2.4 கோடி ரூபா ரொக்கமும் சிக்கின. இவ்வழக்கில் ரன்யா ராவுக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் கடந்த ஜூலையில் ஓராண்டு சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டது.

இதனிடையே ரன்யா ராவிடம் டி.ஆர்.ஐ. அதிகாரிகள் நடத்திய விசாரணையில் அவர் 46 முறை டுபாய், ஆபிரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு சென்றமை தெரியவந்தது.

இதில் 27 முறை டுபாய்க்கு மட்டும் சென்று தங்கம் கடத்தி வந்தமை கண்டறியப்பட்டது. அவரிடம் இருந்து தங்கத்தை வாங்கிய தெலுங்கு நடிகரும் ரன்யாவின் நண்பருமான தருண் ராஜ், நகைக் கடை அதிபர் ஷாகில்ஜெயின், தொழிலதிபர் பரத் ஜெயின் ஆகியோரும் சிக்கினர்.

இதையடுத்து ரன்யா ராவ் உள்ளிட்ட நால்வர் மீதும் அந்நியச் செலாவணி பாதுகாப்பு மற்றும் கடத்தல் நடவடிக்கை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த நால்வரும் 127.3 கிலோ தங்கம் கடத்தி வந்தனர் என்பது உறுதியானதை தொடர்ந்து ரன்யா ராவுக் 102 கோடி இந்திய ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் சட்ட விரோதமாக 72.6 கிலோ தங்கம் கடத்தியதாக தருண் ராஜ்வுக்கு 62 கோடி ரூபாவும், 63.61 கிலோ தங்கம் கடத்திய ஷாகில் ஜெயின், பரத் ஜெயின் ஆகியோருக்கு தலா 53 கோடி இந்திய ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக டி.ஆர்.ஐ. தெரிவித்துள்ளது.

இந்த அபராத தொகையை 3 மாதங்களுக்குள் செலுத்தாவிடில் அவர்களுக்கு சொந்தமான சொத்துகள் பறிமுதல் செய்யப்படும் என டி.ஆர்.ஐ. எச்சரித்துள்ளது.

# பறவை மோதியதால் இரத்து செய்யப்பட்ட ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் சேவை







விஜயவாடாவிலிருந்து பெங்களூருக்குச் சென்ற ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் பறவை மோதியதால் இரத்து செய்யப்பட்டுள்ளது.

விமானம் நேற்று காலை புறப்படுவதற்காக ஓடுபாதையில் தயார் நிலையில் இருந்த போது , கழுகு ஒன்று விமானத்தின் முன் பகுதியில் மோதுண்டது.


இதனால், அந்த விமான பயணம் இரத்து செய்து பயணிகளுக்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டி ஏற்பட்டது.

இண்டிகோ விமானம் தொடர்பான இதேபோன்ற ஒரு சம்பவம் சில நாள்களுக்கு முன்பு பதிவானது.

செப்டம்பர் 1 ஆம் திகதி நடுவானில் பறவை மோதியதாக சந்தேகிக்கப்படும் ஒரு சம்பவத்தால், கொல்கத்தா சென்ற இண்டிகோ விமானம் நாக்பூர் விமான நிலையத்தில் முன்னெச்சரிக்கையாக தரையிறக்கப்பட்டது.

இது பயணிகளிடையே பீதியை ஏற்படுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

272 பயணிகளை ஏற்றிச் சென்ற அந்த விமானம், யாருக்கும் காயம் ஏற்படாமல் பாதுகாப்பாக தரையிறங்கியதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.




# போர்ச்சுகல்லில் கேபிள் கார் தடம் புரண்டு பாரிய விபத்து

## 15 பேர் பலி

போர்ச்சுகல்லில் கேபிள் கார் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய நாடான போர்ச்சுகல்லின் தலைநகர் லிஸ்பனில் உள்ள குளோரியா புனிகுலர் கேபிள் காரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.



கேபிள் கார், மேடான தண்டவாளப் பகுதியில் கீழ் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது கட்டடம் ஒன்றின் மீது மோதியுள்ளது.

கேபிள் கார் செலுத்தும் கம்பி வலுவிழந்து போனதால் விபத்து நிகழ்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த கேபிள் காரில் சுமார் 40 பேர் பயணம் செய்ய முடியும் என தெரிவிக்கப்படுகின்ற நிலையில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், விபத்தில் உயிரிழந்தவர்களில் காரில் இருந்தவர்கள் மற்றும் அருகிலிருந்த பாதசாரிகள் ஆகியோர் அடங்குவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் அடங்குவர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, 18 பேர் காயம் அடைந்துள்ளனர் எனவும் அதில் ஐந்து பேர் மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுவதாக தெரிவிக்கப்படுவதுடன், விபத்து சம்பவம் தொடர்பில் விசாரணை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







## ஆப்கானிஸ்தான் நிலஅதிர்T;

# தொடர்ச்சியாக மீட்கப்படும் நூற்றுக்கணக்கான உடலங்கள்

கடந்த வாரம் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட பாரிய நிலஅதிர்வினால் அழிக்கப்பட்ட வீடுகளில் இருந்து நூற்றுக்கணக்கான உடலங்கள் தொடர்ந்தும் மீட்கப்பட்டு வருகின்றன.

இதனால், உயிரிழந்தோர் எண்ணிக்கை 2,200க்கும் அதிகமாக உயர்ந்துள்ளதாக தலிபான் அரசாங்க பேச்சாளர் தெரிவித்துள்ளார். மூவாயிரத்துக்கும் அதிகமானோர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு மலைப்பகுதிகள் மற்றும் தொலைதூர கிழக்கின் பல மாகாணங்களில் 6.0 ரிக்டர் அளவிலான நிலஅதிர்வு ஏற்பட்டது. இதன்போது பல கிராமங்கள் தரைமட்டமாகின.

இந்தநிலையில், ஆப்கானிஸ்தான் தாலிபான் அரசாங்கத்திடம், அவசரகால மீட்பு முயற்சிகளுக்காக ஒரு இலட்சம் டொலர்கள் மாத்திரமே இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சர்வதேச உதவிகளை தாலிபான் அரசாங்கம் கோரியுள்ளது.















# கொழும்பு விளக்கமறியல் சிறையில் சோதனை; தடைசெய்யப்பட்ட பொருள்கள் கண்டுபிடிப்பு




கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட திடீர் சோதனையின் போது ஸ்மார்ட் கடிகாரங்கள், கையடக்க தொலைபேசிகள் மற்றும் பல்வேறு போதைப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன என சிறைச்சாலை உள் வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்டுபிடிக்கப்பட்ட 27 கையடக்க தொலைபேசிகளில் 07 ஸ்மார்ட் தொலைபேசிகளும், போதைப்பொருள்களில் திருடப்பட்ட ஐஸ் மற்றும் கஞ்சாவும் ரக போதைப்பொருள்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையின் "ஜே" வார்டில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, 04 கையடக்க தொலைபேசிகளும், "எம் 2" வார்டில் நடத்தப்பட்ட சோதனையின் போது 07 கையடக்க தொலைபேசிகள், ஒரு ஸ்மார்ட் கடிகாரம் மற்றும் பிற கையடக்கத் தொலைபேசிகள், அத்துடன் பல்வேறு போதைப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

பறிமுதல் செய்யப்பட்ட குறித்த பொருள்கள் அனைத்தும், கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையின் இரண்டு வார்டுகளிலும் பல்வேறு இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

கையடக்கத் தொலைபேசிகளில் உள்ள தொலைபேசி இலக்கங்களை கொண்டு மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# கிழக்கு பல்கலை மாணவர்களுக்கு நிபந்தனையுடன் பிணை அனுமதி




குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட, கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16 மாணவர்களையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

ஏறாவூர் நீதிவான் முன்னிலையில் மாணவர்கள் 16 பேரும் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்ட போதே, பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான சரீர பிணையில் செல்ல மேற்படி மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், தினமும் மாலை 05 மணிக்கும் 06 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு சென்று கையொப்பமிட வேண்டும் எனவும் நீதிவான் அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கிழக்கு பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு வந்தாறுமூலை வளாகத்தில் தொழில்நுட்ப பீட மாணவர்கள் மீது பகிடிவதை மேற்கொண்டமை தொடர்பில் மேற்படி 16 மாணவர்களும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 07 மாணவிகளும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கை பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்கள் பற்றாக்குறை

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

சுமார் 13,000 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இருக்க வேண்டிய இலங்கை பல்கலைக்கழக கட்டமைப்பில் தற்போது 6,500 விரிவுரையாளர்கள் மட்டுமே இருக்கின்றனர் என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் பேராசிரியர் பிரகீத் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, இலங்கையில் உள்ள பல்கலைக்கழக கட்டமைப்பில் தற்போது 50 சதவீத விரிவுரையாளர்கள் பற்றாக்குறை இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளில் சுமார் 1,500 விரிவுரையாளர்கள் பல்கலைக்கழக கட்டமைப்பை விட்டு வெளியேறியுள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தில் மட்டும் சுமார் 150 விரிவுரையாளர்கள் வெளியேறியுள்ளனர் எனவும் பல பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் போன்ற பீடங்களில் நிலைமை மோசமாக உள்ளதாகவும் பேராசிரியர் பிரகீத் வீரதுங்க சுட்டிக்காட்டுகிறார்.

இந்த சூழ்நிலை காரணமாக, பல பட்டப்படிப்புகளின் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் சிக்கல்கள் எழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு போதுமான வசதிகள் மற்றும் சம்பளம் இல்லாததே இந்த நிலைமைக்குக் காரணம் என்று அவர் மேலும் கூறினார்.

இந்தப் பிரச்சினை மற்றும் பல்கலைக்கழக கட்டமைப்பில் உள்ள பல சிக்கல்கள் குறித்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கக் கூட்டமைப்பு தற்போது அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளது.

# தூர பிரதேசங்களுக்கு இலகுரக ரயில்களை இணைப்பதற்கு அமைச்சரவை அனுமதி

தூர பிரதேசங்களுக்கான பயணிகள் போக்குவரத்து சேவையினை மேம்படுத்துவதற்காக, மூன்று பெட்டிகளைக்கொண்ட இலகுரக ரயில்களை உள்ளீர்க்கும் ஒருங்கிணைக்கும் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

டீசல் இயந்திரங்களால், இயக்கப்படும், மின்சாரக் கட்டுப்பாட்டு அமைப்புகள் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய இந்த ரயில்கள், புத்தளம், மட்டக்களப்பு மற்றும் மிஹிந்தலை போன்ற பகுதிகளில் இயக்கப்படவுள்ளன என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு பெட்டியும் 200 முதல் 240 பயணிகள் மற்றும் பொருள்களை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டதாக அமையவுள்ளது.

குறைந்தளவான பயணிகள் காரணமாக கிராமப்புறங்களில் வழமையான ரயில் சேவையினை முன்னெடுப்பது பொருளாதார ரீதியாக நட்டத்தை ஏற்படுத்துகிறது.

இந்தநிலையிலேயே, இலகுரக ரயில்கள் தொடர்பான யோசனை போக்குவரத்து அமைச்சரினால் முன்வைக்கப்பட்டுள்ளது.





# பொருளாதாரப் பிரச்சினைக்கான தீர்வின் ஊடாக அமைதி, நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவோம்

## வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் உறுதி




பொருளாதாரப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளின் ஊடாக நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதிலும் தாம் உறுதியாக இருப்பதாக வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்பில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் உறுதியளித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் திங்கள் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில், கொழும்பில் அமைந்துள்ள வெளிவிவகார அமைச்சில் சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளைச் சந்தித்த அமைச்சர் விஜித்த ஹேரத் மனித உரிமைகள்சார் விடயங்களில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள சமகால நகர்வுகள் குறித்தும், அவற்றில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் விளக்கமளித்தார்.

அதன்படி புதிய அரசாங்கம் என்ற ரீதியில் நாட்டின் மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்தும் நோக்கில் மாறுபட்ட பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும், அவற்றின் மூலம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்கள்அடையப்பட்டிருப்பதாகவும்அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக வட, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதாகவும், அவற்றுக்குரிய தீர்வைப் பெற்றுக்கொடுப்பதிலும், பொருளாதாரப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளின் ஊடாக நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதிலும் தாம் உறுதியாக இருப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

அதேபோன்று பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்குவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை, நிகழ்நிலைக்காப்புச்சட்டத்தை மறுசீரமைப்பதற்கான நகர்வுகள், ஊழல் ஒழிப்பு செயற்திட்டம், க்ளீன் ஸ்ரீலங்கா செயற்திட்டம், காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் என்பன உள்ளடங்கலாக உள்ளகக் கட்டமைப்புக்களின் சமகால முன்னேற்றங்கள், சுயாதீன வழக்குத்தொடுனர் அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான தீர்மானம் உள்ளிட்ட நகர்வுகள் பற்றியும் அமைச்சர் விஜித்த ஹேரத் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்துள்ளார்.





# நாயகத்தின் வழிகளைப் பின்பற்றும் முஸ்லிம்களுக்கு விமோசனம் கிட்டும்!

## மீலாத் தின செய்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

முஸ்லிம் சமுதாயம் பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு, விமோசனம் அடைவதற்கான தீர்வு அல்குர்ஆனின் போதனைகளிலும், நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) வின் வழிமுறைகளிலுமே காணப்படுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள மீலாதுன் நபி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மீலாத் தின செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

முஸ்லிம் சமுதாயம் இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் சொல்லொணா வேதனைகளுக்கும், சோதனைகளுக்கும் முகம் கொடுத்த வண்ணமே முன்னோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

நவீன உலகை ஆட்கொண்டிருக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகளின் தாக்கம் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராகவும், சிறுபான்மையினராகவும் வாழும் நாடுகளைப் பொறுத்தவரையில் மிகவும் பாரதூரமானவை.

இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் தமது 63 ஆண்டுகால உலக வாழ்வில், நபித்துவம் அருளப்பட்ட திதியிலிருந்து 23 வருடங்கள் இஸ்லாமியத் தூதை மக்காவிலும் மதீனாவிலும் நிலைநாட்டிய காலகட்டத்தில் அடையப் பெற்ற அனுபவங்களை உரிய படிப்பினையாகக் கொண்டு, அன்னாரின் வாழ்வின் விழுமியங்களை பின்பற்றியொழுகி,இம்மை. மறுமை இரண்டிலும் சிறப்பான ஈடேற்றம் பெற அன்னாரின் மீலாத் தினத்தில் நாம்



திடசங்கற்பம் பூணுவோமாக.

முஸ்லிம்களின் எழுச்சியைச் சகித்துக் கொள்ள முடியாத தீய சக்திகள் இஸ்லாத்தின் மீதான பீதி மனப்பான்மையை திட்டமிட்ட வகையில் கட்டவிழ்த்துவிட்டுள்ளன. யுத்த சூழ்நிலையில் பலஸ்தீனம் முதலான பல நாடுகளில் பொது மக்களின் ஜனநாயக உரிமைகள் முற்றாக மறுக்கப்பட்டு, இனப்படுகொலைகளும் அடாவடித்தனங்களும் எல்லை மீறிச் சென்று கொண்டிருக்கும் இந்த வேளையில், நபி பெருமானாரின் வாழ்வில் இருந்து நாம் உயரிய படிப்பினைகளை பெற வேண்டியது இன்றியமையாதது. அதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக.

**ரவூப் ஹக்கீம்,**
**நாடாளுமன்ற உறுப்பினர்**

# மனித அன்பை உலக உயிரினங்களுடன் பகிர்ந்த முஹம்மது நபிகளாரின் பிறந்த தினம் இன்றாகும்!

## எதிர்க்கட்சித் தலைவரின் மீலாதுன் நபி தின வாழ்த்துச் செய்தி

சிந்தனையுள்ள, கருணையுள்ள, நீதி மற்றும் நியாயத்தை உலகுக்குக் கற்பித்த மனிதாபிமான உணர்வுகளையும் மனித அன்பையும் உலக உயிரினங்களுக்காகப் பகிர்ந்தளித்த இறைதூதர் முஹம்மது நபிகளாரின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகின்றது.

அதற்காக முழு உலக மக்களுக்கும் அதேபோல் இலங்கையில் வாழும் இஸ்லாமிய சகோதரத்துவத்திற்கும் வாழ்த்துச் செய்தியை அனுப்ப முடிந்தமை மகிழ்ச்சிக்குரியது.

இவ்வாறு மீலாதுன் நபி தின வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனம், மதம், குலம் அல்லது இருப்பு நிலை பார்க்காமல் ஒருவருக்கொருவர் மரியாதை, கருணை மற்றும் சேவையின் அடிப்படையில் கட்டமைக்கப்படும்போது மட்டுமே ஒரு சமுதாயம் செழிக்க முடியும் என்பதை நபிகள் நாயகம் நமக்குக் காட்டியுள்ளார்.

அன்னாரின் போதனையானது ஒற்றுமை, பணிவு மற்றும் கருணையை பிரதிபலிக்கிறது, அது இன்றும் நமது பாதையை ஒளிரச் செய்கிறது என்பது என் நம்பிக்கை.

ஒரு நாடாக நாம் இப்போது பல சவால்களை எதிர் கொண்டு வருகிறோம். எதிர்காலத்தில் மேலும் சவால்கள்



வரக்கூடும்.

ஆனால் ஒரே மக்களாக, ஒரே குடும்பமாக மற்றும் ஒரே நாடாக ஒன்றிணைவதன் மூலம் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இன மத குல வேறுபாடுகளைப் பார்க்காமல் ஒருவருக்கொருவர் அர்ப்பணிப்புள்ள சமுதாயத்தை கட்டியெழுப்ப அன்னார் காட்டிய வழிமுறைகளை நாமும் பின்பற்ற முடியும்.

அந்த வழிமுறைகளைப் பின்பற்றி இந்தக் கடினமான நேரத்தில் நாம் அனைவரும் நாட்டிற்காக ஒன்றாக அணி திரள வேண்டும்.- என்று தெரிவித்துள்ளார்.



# மனித குலத்துக்கு ஒளியூட்டிய நபிகளாரின் வழிகாட்டுதலை பின்பற்றிச் செயற்படுவோம்!

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் வாழ்த்து



எமது இறைத் தூதரான நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) பிறந்த நாளான இன்றைய மீலாதுன் நபி தினத்தில், உலகெங்கும் வாழும் முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கும், குறிப்பாக இலங்கையிலுள்ள எம் அன்பு மக்களுக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவிக்கையில்,


நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழ்ந்த வரலாறு, மனித குலத்துக்கு வழிகாட்டும் ஒரு சிறந்த முன்மாதிரியாகும். அவர் வாழ்வின் ஒவ்வொரு தருணமும் அன்பு, நம்பிக்கை, சகிப்புத் தன்மை, நீதி மற்றும் சமூக ஒற்றுமை ஆகிய பண்புகளால் நிரம்பியிருந்தது. சமுதாயத்தில் வறியவர்களுக்கு அக்கறை காட்டுதல், அநீதியால் வாடுவோருக்காக குரல் கொடுப்பது, அன்பும் நட்பும் நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்து காட்டியது தான் நபிகளாரின் மகத்தான வழிகாட்டுதல்களாகும்.

இன்றைய உலகம் பல்வேறு சவால்களையும் சிக்கல்களையும் எதிர்கொள்ளும் நேரத்தில், நபிகளாரின் நற்பண்புகளை மீண்டும் நினைவு கூர்ந்து செயல்படுதல் என்பது மிகுந்த அவசியமாகிறது. மதம், இன வேறுபாடுகளை தாண்டி அனைவரும் ஒன்றுபட்டு சமூக ஒற்றுமை, சகோதரத்துவம், சமாதானம் ஆகியவற்றை நிலைநிறுத்த வேண்டும்.

இந்த புனித நாளில், உலகம் முழுவதும் அமைதியும் நிம்மதியும் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். குறிப்பாக, பல துயரங்களையும் அநீதிகளையும் எதிர்கொண்டு வரும் பலஸ்தீன் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, அவர்கள் வாழ்வில் நீதி, சுதந்திரம் மற்றும் அமைதி நிலவவேண்டும்.- என்றார்.

**கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்,**
**பிரதித் தலைவர்,**
**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.**

# ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை குறித்து அறிக்கை வெளியீடு



நிறைவேற்றப்படாத
நீதியின்
மீள்பரிசீலனை...

**2025.09.08 ம் திகதி**
**பி.ப. 2.30 தொடக்கம் 5.30 வரை**

**இலங்கை மன்றக் கல்லூரியில்**

**கருத்துகள்**

- சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவில் சமூக செயற்பாட்டாளர் **மந்தனா இஸ்மயில் அபேவிக்ரம**
- முரசு பத்திரிகையின் ஆசிரியர் **என்.வித்யாதரன்**
- பிரதம ஆசிரியர் அனித்தா பத்திரிகை **கே. டப்லியூ. ஜனரஞ்சன**

ஊடகவியலாளர்கள் ஒருசிலரின் சுருக்கமான கருத்து கூறலுடன்

சகோதர உங்களை அன்புடன் அழைக்கிறோம்!

தொடர்புகளுக்கு 0763603737 | 0777234584 | 0762789001

ஏற்பாடு

අතුරුදහන්වූවන්ගේ පවුල් එකතුව
காணாமற்போனாரின் குடும்ப ஒன்றியம்
Families of the Disappeared

# இன்றைய ராசி பலன்கள் -05.09.2025




இன்றைய நாள் நீங்கள் விரும்பத்தக்கதாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அது உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். அதிகப்படியான பண வரவு ஊக்கத்தொகையாக கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகமான மன ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் அமைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் புத்தி சாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். ஸ்ரீலட்சுமி நரசிம்மரை வணங்குவதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று உங்களுக்கு வெளியிலிருந்து ஊக்கம் கிடைக்காது. உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் பணிகளை குறித்த நேரத்திற்கும் முடிப்பீர்கள். எதிர்பாராத வகையில் வரும் பணிகளையும் முடிப்பீர்கள்.

பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரும். தேவையானவை மற்றும் தேவையற்றவை போன்றவற்றை சாதுர்யமாக அறிந்து கொள்ள வேண்டும். இதனால் பண இழப்பை தவிர்க்கலாம்.




இன்றைய நாள் பயனுள்ளதாக இருக்காது. என்றாலும் வருத்தப்படுவதை குறைத்துக் கொண்டு, உங்களுக்கு விருப்பமான விஷயங்களுக்காக நேரத்தையும் திறமையையும் பயன்படுத்துங்கள். தியானப் பயிற்சி சிறந்தது. குழப்பங்களுக்கு இடம் கொடாமல் தெளிவாக எண்ண வேண்டும்.

உங்கள் நாளை திட்டமிட்டு பணியாற்றுங்கள். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் அன்றாட பணிகளுடன் வேறு பணிகளையும் ஆற்றுவீர்கள்.

உங்கள் உணர்சிகளை முறையாக கட்டுப்படுத்த வேண்டும். இதனால் உறவுப் பிணைப்பு பாதிக்கப்படும்.

இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை காணப்படாது. பணம் சம்பாதிக்கும் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள். கண்டிப்பாக நல்லது நடக்கும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி உங்களுக்கு சாதகமாக அமையும் நாள். மிகவும் அற்புதமான நாள். உங்கள் முடிவெடுக்கும் திறமையில் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் உறுதி காணப்படும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் இனிமையான முறையில் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும்.

இன்று மொத்தத்தில் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நல்ல தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று பொறுமை அவசியம். இன்று உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

பணியிடத்தில் பரபரப்பு காணப்படும். திட்டமிட்டு முன்னுரிமைப்படி பணியாற்றினால் எல்லாப் பணிகளையும் எளிதாக முடிக்கலாம்.

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பை பரிமாறிக் கொள்வது, அதுவும் கஷ்ட நேரங்களில் பரிமாறிக் கொள்வது உறவில் மிகவும் அவசியம். அவர் விரும்பும் வகையில் நடந்து கொள்வது சிறந்தது.

சிறு கடன்கள் மூலம் உங்கள்அடிப்படை தேவைகளை எளிதாக சமாளிக்கலாம். உங்களிடம் அதிக பணம் இல்லாவிட்டாலும் இருக்கும் பணத்தில் எப்படி வாழ வேண்டும் என்று அறிந்திருப்பீர்கள்.

உங்கள் உடல் நலத்தை சீர்படுத்தி இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு பணம் செலவு செய்ய நேரலாம்.




ஆன்மீக சொற்பொழிவுகள் கேட்டல் மற்றும் அடிக்கடி கோவிலுக்கு செல்வது மனதிற்கு ஆறுதல் தரும்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். தியானம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உறவு சம்பந்தமான விருப்பு வெறுப்புகளைப் பற்றி உங்கள் துணையிடம் பேசி தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் நல்ல புரிந்துணர்வும் உறவுப் பிணைப்பில் வலுவும் ஏற்படும்.

பயணத்தின் போதும் பணத்தை கையில் கொண்டு செல்லும் போதும் கவனமாக இருக்க வேண்டும். பயணத்தின் போது குறைந்த அளவில் பணத்தை கையில் எடுத்துச் செல்லுங்கள்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்தை பராமரிக்க இன்று பணம் செலவு செய்ய நேரலாம்.




நீங்கள் அதிகப்படியாக செயலாற்றினால் வெற்றியைக் காண நேரலாம். உங்களின் நகை மற்றும் விலை மதிப்புள்ளபொருட்களைபாதுகாத்துக்கொள்ள வேண்டும். எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் பாதகமான விளைவுகளை தவிர்க்கலாம்.

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். நீங்கள் சாதாரணமாக செய்வதை விட இன்று கூடுதலாக செயல் பட வேண்டும். என்றாலும் திட்டமிட்டு செயலாற்றினால் நீங்கள் நன்மை காணலாம். பனியின் தரத்தில் கவனம் தேவை. வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் அன்பும் அரவணைப்பும் உங்கள் இருவருக்குமான உறவை வளர்க்க உதவும். உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொண்டால் பதிலுக்கு அவரும் உங்களிடம் அன்பை வெளிபடுத்துவார்.




இன்று இனிமையான சாதகமான நாள். இன்று நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்றைய நாளை முறையாக திட்டமிடவும். முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள்எந்தப் பணி செய்தாலும் அதில் இன்று வெற்றி கானபீர்கள். உங்கள் பணியைக் கண்டு உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் பேசி அளவளாவுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள். ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பு அளிப்பீர்கள்.

பணம் அபரிமிதமாக காணப்படும். அதனை உங்களின் நலனுக்கு பயன்படுத்துவீர்கள். பணத்தை சிறந்த முறையில் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -05.09.2025




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.

நேர்மறையான எண்ணம் மற்றும் திட்டமிடல் மூலம் இன்று பதட்டமின்றி இருக்கலாம். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்காது. என்றாலும் அமைதியாக செயல்களை கையாண்டால் சரியாக செயலாற்றலாம். செயல்களை பொறுமையுடன் கையாளுங்கள்.

இன்று முன் கூட்டியே திட்டமிடலும் அதன்படி நடந்து கொள்வதும் கடினமாக இருக்கும். பணிகளை சரியான விதத்தில் கையாண்டால் சுமை குறைவாகத் தெரியும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இது மறக்க முடியாத நாளாக இருக்கும். இருவருக்கும் இடையே நல்ல பிணைப்பு ஏற்பட இருவரும் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். நல்ல வார்த்தைகளை பரிமாறிக் கொள்வதன் மூலம் இன்றைய நாளை சிறந்ததாக ஆக்கலாம்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை விட அதிகம் பணம் இன்று உங்களுக்கு தேவையாக இருக்கும். என்றாலும் சூழ்நிலையைப் புரிந்து கொண்டால் எது தேவை எது தேவையில்லை என்று அறிந்து நீங்கள் உணர்வீர்கள்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்திற்காக இன்று பணம் செலவு செய்ய நேரும்.




இன்று இறை வழிபாட்டில் ஈடுபடுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள்.

பணியிடத்தில் திட்டமிட்டு வேலை செய்தால் பலன் கிடைக்கும். உங்களின் நேர்மறையான அணுகுமுறை காரணமாக அதிகப் பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது புரிந்துகொண்டு பொறுமையாக பேச வேண்டும். உங்கள் வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்புளதால் கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவதன் மூலம் நேர்மறையான விளைவுகள் காணலாம்.

நீங்கள் அதிகமாக செலவு செய்வீர்கள். ஆனால் சிறப்பாக திட்டமிட்டால் பணம் குறைவாக செலவு செய்யலாம். தேவையற்ற செலவுகளை தவிர்க்கவும்.

உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது. உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.




நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். வெற்றியின் உச்சத்திற்கு செல்வீர்கள்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் முயற்சி பாராட்டைப் பெறும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி சிறியதாக இருந்தாலும் அதனை மகிழ்வுடன் சிறந்த முறையில் செய்வீர்கள்.

இன்று உங்களுக்கும் உங்கள் துணைக்கும் மிகவும் இனிமையான மகிழ்ச்சியான நாள். இருவரும் ஒருவரோடொருவர் நேரம் ஒதுக்கி கலந்து பேசலாம். அதே சமயத்தில் அமைதியைக் கையாள வேண்டும்.

இன்று கணிசமான பணம் சேமிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தின் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.

# தெங்கு விவசாயிகளுக்கு புதிய காப்புறுதி திட்டம்



தெங்கு செய்கையாளர்களுக்காக புதிய காப்புறுதி திட்டத்தை விவசாய மற்றும் கமநலக் காப்புறுதி சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

புதிய உற்பத்தி, மீள் உற்பத்தி, உப உற்பத்தி போன்ற மானிய முறைகளின் மூலம் வழங்கப்படும் தென்னை விதையை 05 வருடங்கள் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்து பாதுகாக்கும் விதமாக இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த காப்புறுதி காலம் 15 ஆவது நாளில் இருந்து 01 வருடம் வரை நடைமுறைப்படுத்தப்படும்.

காப்புறுதி தவணைக் கட்டணமாக ஒரு தென்னை மரத்திற்காக 67.50 ரூபா என்பதுடன் மொத்த காப்புறுதி 550 ரூபாவாக வழங்கப்படும்.

தெங்கு பயிர்ச்செய்கை சபை, விவசாய மற்றும் கமநலக் காப்புறுதி சபை ஆகியவற்றின் ஒன்றிணைந்த திட்டமாக இது அமைந்துள்ளது.

இந்த காப்புறுதி யோசனை முறை மூலம் வறட்சி, வெள்ளம், கனமழை, சூறாவளி, மண்சரிவு, காட்டு யானைகளின் தாக்கம், காட்டு மிருகங்களின் தாக்கம், மின்னல், பீடைகளின் தாக்கம் போன்ற நிலைமைகள் தெங்கு உற்பத்திக்கான காப்புறுதி திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுகின்றன.